


அமரர். திருமதி. சின்னப்பிள்ளை பாலிப்போடி

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

09.02.2016 செவ்வாய்க்கிழமை


शुभ लाभ

# சமர்ப்பணம்


அன்பு காட்டி அரவணைத்து, ஆருயிராகத் திகழ்ந்த
எங்கள் குல விளக்கே மண்ணுலகம் மறந்ததென்ன?
அம்மா எனும் சொல்லிற்கு அகராதி தலைவணங்க
தெய்வமே தாயாக வந்ததோ? எங்களுக்கு
பாரினில் உள்ளோர் உனைப் போற்ற பரிந்துண்டு வாழ்தாயே
பல திசையும் உனைப் போற்ற பதறுதம்மா எம் இதயம்

பொன் போன்ற புன்சிரிப்பு கண்ணிமை போன்ற அரவணைப்பு
பண் போன்ற நற்பேச்சில் பொன் மொழிகள் சொன்னாயே
மாயை உலகமதில் காட்டிய பாதையிலே பொய்மை எனும் வாழ்கையினை
மனமகிழ்ந்து வாழ்ந்தாயே – அம்மா
தெரிந்தவர் எல்லாம் உனைப் போற்றும்
தெய்வமாய் வாழ்ந்தாயம்மா

காலக் கயவனவன் கதிகலங்கி வந்தானோ? பாரினிலே
ஞாயிறவன் வந்தானோ நடுசியில் – உன
உயிரைக் காவு கொள்ள – அன்னபூரணி நீயும்
அமாவாசை தினத்தன்று சொர்க்க வாசல்
சென்றாயோ? இறைவனடி

உங்கள் நிஜங்கள் எங்கள் நெஞ்சங்களில் என்றும்
நிழலாடிக் கொண்டிருக்கும் உங்கள் நினைவுகளைச்
சுமந்து கொண்டு வருகின்ற இந் நினைவு மலரை
சமர்ப்பணமாய் உங்கள் பாதங்களில் சிரம் தாழ்த்தி
சமர்ப்பிக்கின்றோம்

*ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!*





# அமரர். திருமதி.
# சின்னப்பிள்ளை பாலிப்போடி

மலர்வு :
21.03.1927

உதிர்வு :
10.01.2016



அமரர். திரு.
பாலிப்போடி நடராஜா

மலர்வு :
07.06.1951

உதிர்வு :
15.03.2012

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழுவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

பின்னு செஞ்சடையும் பிறைதவழ் மொழும்பும்
பெரியதங் கருணையும் காட்டி
அன்னை தேன் கலந்து இன்னமுது உகந்து
அளித்தங்கு அருள்புரி பரமர்தங் கோயில்
புன்னை தேன் சொரியும் பொழிலங்குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னை தேன் அரும்பும் பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை யாதிரை நாள்
நாராய ணனோடு நான்முக னங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்த
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

சரண கமலாயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க - அறியாத
சகட சட மூட மட்டி பவ வினையிலே சனித்த
தமியன்பிடி யால் மயக்க - முறுவேனோ
கருணை புரி யாதிருப்ப தென குறையில் வேளை செப்பு
கைலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீது ரத்ன மணியணி பொன் மாலை செச்சை
கமழுமண மார்கடப்பம் - அணிவோனே
தருண மிதை யாமிகுந்த கனமதுறு - நீழ்சவுக்ய
சகல செல்வ யோகமிக்க - பெருவாழ்வு
தகமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த - வடிவேலா
அருணதன பாதபத்ம மது நிதமு - மேதுதித்த
அரிய தமிழ் தானளித்த - மயில் வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீது தித்த
அழகு திரு வேரசத்தின் - முருகோனே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

## பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ் செழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புகழோடு தோன்றிப் புகழோடு வாழ்ந்து புகழோடு மறைந்த
அமரர். திருமதி. சின்னப்பிள்ளை பாலிப்போடி

# வாழ்க்கை சரித்திரம்

இயற்கை எழில் கொஞ்சும் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பின் தென்பால் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் செந்நெல் விளையும் நிலங்களும், வெண்தாமரை பூத்து இதமான தென்றல் காற்றும், எந்நேரமும் வீசிச் கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரும் ஊராம் பண்டாரியாவெளியில் மாணிக்கப்போடி மூர்த்திப்பிள்ளை தம்பதினருக்கு 1927ம் ஆண்டு பங்குனி மாதம் 21ம் நாள் சின்னப்பிள்ளை தரணியில் அவதரித்தார்.

புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்த இவர் உடன் பிறப்புக்கள் கனகம்மா, இளையதம்பி, தம்பிப்போடி, பாக்கியம், திருமேனி, பார்வதி, லெட்சுமி இவர்களுடன் தனது இளமைக் காலத்தை தாய் தந்தை அரவணைப்பில் கலிங்ககுடி பரம்பரை போற்ற பண்டாரியாவெளியில் புகழ் மிகுந்து வாழ்ந்து வந்தார். இயற்கையின் பேரொளி மிகுந்த பழம்பதியான அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை திறம்பட கற்றார். அழகான தோற்றமும் நீண்ட கூந்தலும், பண்பான அடக்கமும் அவரை ஆளுமை மிக்க மாதுவாக மாற்றியது.

காலங்கள் உருண்டோடின இவர் தனது இளமைக் காலத்தை தாய் தந்தை மற்றும் உறவினர்களோடு நலமாய்க்களித்த காலமதில் பருவ மங்கைப் பருவத்தை அடைந்தமையினால் இவரது பெற்றோர் பழமை நெறி தவறா பண்பாட்டியலோடு விருந்தோம்பலுக்கு பெயர்போன இடமாகிய கன்னங்குடாவைச் சேர்ந்த செம்பாப்போடி பாலிப்போடி அவர்களை 1958ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்வின் நல்லறப் பயனாக நடராஜா, கண்மணி,

பூரணம்மா, அன்னலெட்சுமி, பஞ்சவர்ணம், அபிராமி, என ஒரு ஆண் பிள்ளையாக கடவுள் கொடுத்த வரமாம் ஏக புதல்வனையும், ஐந்து பெண் பிள்ளைகளையும் ஈன்றெடுத்தார்.

இல்லறத்தில் நல்வாழ்வு கண்ட இவர் மாயை உலகில் தலையாட்டும் பொம்மைகளாகி விதியின் பயனாக தனது தவப் புதல்விகளுள் தனது மூன்றாவது மகளான அன்னலெட்சுமி சிறுபிள்ளைப் பராயத்திலே இறைபதம் சென்றார்.

வாழ்க்கை எனும் பாதையில் பல தடைகளையும் தாண்டி தான் வாழ்ந்த சமூகத்திற்கு சமூக சேவை ஆன்மீகத் தொண்டு என தன்னலம் கருதாது அளப்பெரும் சேவைகளைச் செய்து வாழ்வில் என்றும் மறக்க முடியாத உத்தமியாக வாழ்ந்து வந்தார்.

"தோன்றிப் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க புகழோடு தோன்றி, புகழோடு வாழ்ந்து, வழி காட்டினார். பண்டாரியாவெளி பதியில் பிறந்து வளர்ந்தாலும் 1970ம் ஆண்டுகளில் அன்பு, அரவணைப்பு, ஒற்றுமை என்பவற்றுக்கு பெயர்போன இடமாகவும், இயற்கை அன்னையவள் எழில் கொஞ்சும் பதியாகவும், நெற்செய்கை செல்வச் செழிப்பு மிகுந்த இடமான கழனி வளம் கொழிக்கும் களுமுந்தன் வெளியில் தன் கணவர் ஐந்து பிள்ளைகளுடனும் வதிவிடத்தை அமைத்துக் கொண்டார் .

இல்லற வாழ்வு இன்புற சிறக்கையில தனது கடைசி மகளின் ஒரு வருட பூர்த்தியாகும் வேளையிலே தன் கணவர் பாலிப்போடியை திடீர் மரணம் சம்பவித்தது. மங்கள வாழ்வழிந்து அமங்கள மாதுவாய் தனது ஐந்து குழந்தைகளுடன் குடும்பத்தலைவியாய் பொறுப்புடன் மக்களுக்காய் உயிர் வாழ்ந்தார். இவரின் ஒரு கரமாய் தனது மூத்த மகனான நடராஜா குடும்ப விளக்கை பிரகாசிக்க வைத்தார். நான்கு

பெண் பிள்ளைகளையும் மனம்போல் வாழவைத்து குடும்ப குல விளக்காக்கினார். தனது பிள்ளைகளுள் தன் மகனை இல்லற பந்தத்தில் இணைத்தார். திருமண பந்தத்தில் கால்வைத்தும் தாரத்தைவிட தாயவள் உயர்ந்தவள் எனக் கருதி தன் வாழ்நாட்களை தாயுடன் இன்புற வாழ்ந்தார். தனது பெண் பிள்ளை நால்வருள் கடைசி மகள் அபிராமி சிறந்த தொழிலான வைத்தியசாலையிலே பணிபுரிய இன்புற மகிழ்ந்தார். இவர் தன் மகனை வயதெல்லை சென்றாலும் தாய்க்கு சிறுபிள்ளைபோல் வாழ்ந்த இவரது மகன் நடராஜா தன் தாய்க்கு முன்னரே 2012.03.15ம் திகதியன்று இரவோடு இரவாக நிம்மதியாக தூங்கி இறைபக்தியுடனே அதிகாலை வேளையிலே யாருக்கும் சொல்லாமல் தூங்குவது போல் மரணம் தூங்கி எழுவது போல் இறையடி சேர்ந்தார்.

இவர் தனது பெயர் சொல்வதற்கு ஏற்றாற்போல் தனது பிள்ளைகள், (14) பேரப்பிள்ளைகள், (03) பூட்டப் பிள்ளைகள் ஆகியோரை பிறர் மதிக்கத்தக்க வகையில் வாழ வைத்து பேரப்பிள்ளைகளையும், பிள்ளைகளையும் நற்பெரும் பணிகளுக்காய் ஈந்து கொடுத்தார். இவர் களுமுந்தன்வெளியூர் போற்றும் தன் வாழ்வை சரித்திரமாக்கி ஊர் போற்ற பலர் போற்றும் தாயாக வாழ்ந்து வந்தார். தன் வேலைகளை யாரிடமும் கொடுக்காமல் தானே செய்து, மற்றவர்களையும் அன்பாக உபசரித்து தனது நான்கு பிள்ளைகளின் ஆதரவுடன் மூன்றாவது மகளான பஞ்சவர்ணத்தின் துணையுடன் சந்தோசமாக கதைகள் பேசி வருவோரை பண்போடு அரவணைத்து புத்திமதிகள் பல கூறி தனக்கு இல்லை என்றாலும், தன் பசி மறந்து இரங்கல் என வந்தோரை எல்லாம் இன்முகத்தோடு ஆதரித்து வயிறாறச் செய்த "அட்ஷய பாத்திர" அன்ன பூரணியாக வாழ்ந்தார்.

காலங்கள் கடந்தோடினாலும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நோயின்றி திடமாக உறுதிபெற்ற தாயவள் தன் மகனின் இறப்பைப்போல் தன் இறப்பும் அமைய வேண்டும் என தினம் தோறும் இறைவனை பூஜித்து வந்தார். வாழ்நாள் தான் செய்த புண்ணிய

தவமாய் அமைந்தது, கடவுளே வந்து வரம் கொடுத்தாட்கொண்டது போல் தினம் தோறும் உணவுண்டு வழமைபோல் இராத்திரியில் தூங்குவதும் இயல்பு இவர். நோயின்றி சனிக்கிழமை தினத்தன்று வழமைபோல் எல்லோரோடும் பேசி உணவு உட்கொண்டு தூங்குகையில் உலகமே அமைதியாய் தூங்கிக் கொண்டிருக்கும் போது தனது 89 ஆண்டுகளை இன்புற கழித்த நிம்மதியில் தூங்கிக் கொண்டிருப்பது போல் திடீர் என்று ஞாயிறு தினத்தன்று அமாவாசை திதியில் (10.01.2016) அதிகாலை நேரத்திலே 3 மணியளவில் அமைதியான வேளையிலே கண்ணிரங்கக் காலனவன் இவர் உயிரைப் பறிக்க நிரந்தரமாக நித்திரையாகி விட்டார்.

பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் விண்ணுலகில் சாந்தியடைந்து பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

சுபம்

குடும்பத்தினர்
களுமுந்தன்வெளி,
அம்பிளாந்துறை.

" பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும் "

# தர்மத்தின் தாய்

அன்பால் அரவணைப்பால், பண்பால், பராமரிப்பால் உன்பால் ஈந்தவளே அம்மா நீ சின்னப்பிள்ளை பாலிப்போடி என்று சொல்ல எம்மால் உருகுதம்மா, தூண்டாமணி விளக்கே நீ தூண்டி அணைந்தனயோ? உன் தர்மத்தின் செயற்பாடு வந்தாரை வரவேற்று நாடி வருவோர்க்கு நற்பணி செய்தீரே.

அன்பும் பண்பும் அதனுடன் அறமும் உன் இதயக் கோயிலில் குடியிருந்தன. கடுமையான பிரதேசமான களுமுந்தன்வெளி கிராமத்தில் கண்ணுற்று கஷ்டப்பட்ட மக்களுக்கு அரியசேவை செய்து அதனுடன் விடுதலைப் போராட்ட காலத்தில் வெளியிடத்தில் இருந்து பதறி பசியுடன் வருவோருக்கு பாதுகாப்பளித்து, பகலிரவு உணவளித்து பகைவனின் கையில் சிக்காமல் வழி அனுப்பிய அன்னையே நல்லறமாய் இருந்த இல்லற வாழ்க்கையில் அல்லலுறாது புத்திர பாக்கியத்தைப் புகழுடனே பெற்று நீயும் குடும்ப குலவிளக்காய் குதூகலித்து வாழ்ந்தாயம்மா! இட்டபணி, தொட்டபணி கட்டளைகள் அத்தனையும் உன் தருமத்திற்கு இணையாகுமா? ஊர்போற்ற பார்போற்ற, உன் உறவு போற்ற, உன் பிள்ளைகள் வாழ்ந்து வருவது சிறப்பம்சமாகும். இவரைப் போன்று மற்றவர்களையும் நல்ல நிலையில் வாழ வேண்டுமென நினைத்தது மாத்திமின்றி செயலிலும் வாழ்ந்து காட்டியவர்.

வாழும் காலத்தில் எல்லோரிடமும் அன்பாகவும் பணிவாகவும், பழகி தனக்கென ஒரு தனித்ததுவத்தை பெற்றுக்கொண்டார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்பரென்றும் என்பும் உரியர் பிறருக்கு"

இவ்வாறு சுற்றம் போற்ற தமது கிராமத்தின் பண்பாட்டின் இலக்கணம் குன்றாது நல்ல முறையில் மற்றவரது இன்பதுன்பங்களில் விருப்புடனும் பங்கு கொண்டு வாழ்ந்தவர்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உள்"

இவர் எப்படியும் வாழலாம் என்றிராது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நோக்கில் தான் நினைத்ததை சாதிக்கும் சாணக்கியம் கொண்டவராக திகழ்ந்ததால் சீரும், சிறப்புடனும் வாழ்ந்தவர் எனவே பிறந்தவர் இறப்பது திண்ணம் என்பது நிச்சயம் இதற்கமைய வாழ்ந்த காலம் முடிவுற இவ்வுலகை விட்டு நீங்கினாலும் எம் அகத்தால் அணையாத தீபமாக வாழ்ந்து காட்டியவர்

இத்தகைய பெருந்தகையர்கள் இம்மண்ணை விட்டு நீங்கினாலும் அவர் காட்டிய வழியில் வாழும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் மற்றும் உறவினர்களும் அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் இந்நாட்களில் அவர் துயர் நீங்கி வாழ வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*திரு. இ. சாந்தலிங்கம் (G.S)*
*அகில இலங்கை சமாதான நீதவான்,*
*வண்ணக்கர் (செயலாளர்),*
*ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்,*
*கொக்கட்டிச்சோலை.*

## அமரர்.திருமதி. சின்னப்பிள்ளை பாலிப்போடி அவர்களின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

மட்டுமாநகரின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் செந்நெல் விளை நிலங்களும். வெண்தாமரை பூத்து, இதமான தென்றல் காற்றும் எந்நேரமும் வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பழம்பெரும் ஊராம் பண்டாரியாவெளியில் மாணிக்கப்போடி மூர்த்திப்பிள்ளை தம்பதியினரினருக்கு 1927.03.21ம் திகதியன்று சின்னப்பிள்ளை அவர்கள் அவதரித்தார்.

புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்த இவர் தனது இளமைக் காலத்தை தாய் தந்தை மற்றும் உறவினர்களோடு நலமாய்க் களித்த காலமதில் பருவவயதை அடைந்தமையினால் இவரது பெற்றோர் பழமை நெறி தவறா பண்பாட்டியலோடு விருந்தோம்பலுக்கு பெயர்போன இடமாகிய கன்னங்குடாவைச் சேர்ந்த செம்பாப்போடி பாலிப்போடி அவர்களை திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்வின் நல்லறப்பயனாக ஐந்து (05) பெண் பிள்ளைகளையும் ஓர் (01) ஆண் மகனையும் பெற்று நல்வாழ்வு கண்ட இவர் தான் வாழ்ந்த சமூகத்துக்கு சமூகசேவை ஆன்மீகத் தொண்டு என தன்னலம் கருதாது அளப்பெரும் சேவைகளைச் செய்து வாழ்வில் என்றும் மறக்க முடியாது உத்தமியாக வாழ்ந்துள்ளார்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க புகழோடு தோன்றி வாழ்ந்து வழிகாட்டி புகழோடு அமரத்துவமடைந்த அமரர். சின்னப்பிள்ளை அவர்களின் இழப்பு வேதனையைத் தந்தாலும் அன்னார் நீண்ட ஆயுளுடன் இவ்வுலகில் வாழ்ந்து எம்மோடு இருந்தமை மகிழ்வைத் தருகிறது. தனது பெயர் சொல்வதற்கு ஏற்றாற்போல் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,

பூட்டப்பிள்ளைகள் ஆகியோரை பிறர் மதிக்கத்தக்க வகையில் வாழ வைத்திருப்பது மகிழ்வைத் தருகிறது.

அமரர். சின்னப்பிள்ளை அம்மையார் அவர்கள் பண்டாரியாவெளிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும் அவரது இறுதிக்காலம் வரை அன்பு அவரணைப்பு, ஒற்றுமை என்பவற்றுக்கு பெயர்போன இடமான கழனி வளம் கொழிக்கும் களுமுந்தன் வெளியிலே வாழ்ந்து அக்கிராமத்தின் நற்பெரும் பணிகளுக்காய் தனது பிள்ளைகளையும் அங்கு ஈர்ந்து கொடுத்து அமரத்துவமடைந்துள்ளார்

பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார், ஸ்ரீ முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. கமலநாதன்
(தலைவர்)
ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார்,
ஸ்ரீ முத்துமாரியம்மன்
ஆலய பரிபாலன சபை.
பண்டாரியாவெளி.

# குடும்ப உறவுகளின் நினைவுக் காணிக்கை

## அன்னையின் மறைவால் ஆறாத்துயருறும்

## அன்பு மக்களின் இதய காணிக்கை

அம்மா என்று ஆசையுடன் அழைக்க
அம்மா! நீயின்றி அழுது துடிக்கின்றோம்
சும்மா நீ எம் பக்கம் இருந்தால் போதும்
சுகமெல்லாம் கிடைக்குமம்மா!

பெற்றெடுத்த கருவறையே
பெயர் விளங்க வாழ்ந்த அன்னையே!
உற்றார் உறவுகளுடன்
உறவாடி அன்பு சேர்த்த தாயே!

உன் அழகுமொழி கேட்பதெப்போ
அரவணைக்கும் கரங்களுள் நாம் அடங்குவதெப்போ
உன் மூச்சு பறந்து போச்சோ தாயே!
உதவி செய்ய யார் இனி எமக்கோ!

பத்து மாதங்கள் நின் கருவறையில்
பக்குவமாய் எமைப் பாதுகாத்து
சுமக்கும் வேதனையும் சுகமென எமையீன்ற
சுந்தரத் தமிழரசி நன்றிகள் கோடியம்மா!

தாயாக நீ! கிடைப்பதற்கு நாம்
தவம் ஆற்றியிருக்க வேண்டும் அம்மா
சேய்களாய் நாம் மலர்வதற்கு இறை
திருக்கொடையே கருணையம்மா!

அங்க அசைவுகளில்
நின் அழகு காண்போமம்மா!
ஆராரோ நீ பாடும்போது
அம்மா உன் குரல் இனிக்குமம்மா!

கண்கள் நிறையக் காட்சி
தருகின்றாய் அன்னையரே!
நெஞ்சங்கள் நிறைந்து நின்று
நினைவுகளை விரிக்கின்றாய் தாயே!

ஆசைப்பட்டவற்றைக்
காசு இருந்தால் வாங்கலாம் அன்னையே
அம்மாவை வாங்கி
அழகு பார்க்க முடியுமா தாயே!

சமூகத்துக்கு ஏற்ற தாயே!
சந்ததி காத்த பெட்டகமே நீ!
சரிந்து மறைந்து விட்ட செயல்
தாங்க முடியவில்லையே தாயே!

விருந்தோம் பலுக்கு அம்மா நீ!
வீட்டின் "அட்ஷய" பாத்திரமே!
மருந்தெனினும் மற்றவர்க்குப்
பகிர்தளிக்கத் தவறமாட்டாய்

சொல்லியழக் கண்ணீர்
கனக்கிறது அம்மா
கடவுள் பதம் நின் ஆத்மா
கருணை பெறக் கும்பிட்டோம்

# பேரப்பிள்ளைகளின்

# கண்ணீர்த் துளிகள்

பாட்டியெங்கள் பாட்டியம்மா
பண்பு நிறை தாயம்மா - உந்தன்
பணிகளுக்கு நிகரிங்கே
யாருமே இல்லையம்மா - நீ
ஊட்டி விட்ட உணவு ருசி
ஒருதடவை கிடைக்காதா - எங்கள்
உள்ளம் நிறை பாட்டியம்மா
ஓடிவரமாட்டாயா

தாய்ப்பாலை அன்னையவள்
தானூட்டும் போதெல்லாம்
சேய்கள் எங்கள் அருகிருந்து உன்
சிந்தனையை எமக்காக்கி
கவனம் புரையேறு மென்று
கட்டளையைப் பிறப்பித்து - எங்கள்
கன்னங்களில் முத்தமிட்டுக்
காதலிப்பாய் பாட்டியம்மா

தங்க நிலா தான் காட்டிக்
கடைந்தெடுத்துச் சோறூட்டிப்
பழங்கதைகள் சொல்லிச் சொல்லி
பக்குவமாய் வளர்த்தவளே!
நிழல் விருட்சம் நீயம்மா
நீ இன்று இல்லையம்மா - எங்கள்
தலைதடவி முத்தமிடப்
பாட்டி இனியாரம்மா

கற்றறிந்து நாம் உயரக்
கனப்பொழுதும் ஊக்குவிப்பாய் - எங்கள்
கண்களுள்ளே வாழ்ந்த பாட்டி
காணாமல் போனாயோ
ஊர் உன்னைத் தேடித் தேடி
உள்ளமெல்லாம் அழுகிறது - எங்கள்
உத்தமியே "சின்னப்பிள்ளை"
ஓடிவரமாட்டாயோ

வீடுதேடியார் வரினும்
விருந்தோம்பும் நின்சிறப்பு - உந்தன்
வினைத்திறனைக் காட்டியெங்கள்
வேட்கையினை ஊக்குவிக்கும்
காடுசென்று உறங்கிறியோ
கலைமகளே பாட்டியம்மா - எங்கள்
காவலுக்கு யார் துணையோ
கண்மூடிக் கொண்டாயோ

பாட்டி பூட்டியாக நின்று
பராமரித்த தாயவளே
நீட்டிக் கரம் அரவணைத்து
நீடு எம்மைக் காத்த பழம்
மூதாட்டி "சின்னப்பிள்ளை"
முழுநிலவே மறைந்தனையோ - என்றும்
முழுமுதலின் பதங்களிலே
ஆறுதலாய்க் கிடப்பாயே!

# சகோதர சகோதரிகளின் மனக் கொதிப்பு

சாந்தமான எம் சகோதரியே
சரித்திர நாயகியே
பந்தமுள்ள எம்முறவே
பதைக்கிறது எம்முள்ளம்
சேர்ந்திருந்து நாம் வாழ்ந்த காலம்
செல்லமாய்க் கூடி விளையாடிய காலம்
நினைவுகளில் கூடி வந்து
நெஞ்சங்களை உருக்குதம்மா

பண்டாரியா வெளித் தாயகத்தின்
பண்பரசி "சின்னப்பிள்ளை"
களுமுந்தன் வெளிக் கிராமத்தின்
கண்ணியமான மூத்தவளே
மனித விழுமியங்கள்
மதித்து நடந்த சோதரியே
புனிதமான உனையிழந்து
புலம்பியழ விதிப்பயனோ

எங்களுக்கேற்ற
இனிய உடன்பிறப்பே
தங்கம் நிறை தாயவளே
தனித்து நீ எங்குற்றாய்
என்றும் இறைவனையே
இறைஞ்சுகிறோம் சோதரியே
நன்றே அவர் திருப்பாதம்
நலம் பெறட்டும் நின் ஆத்மா!

# மனம் நிறைவான மருமக்களின் மனக் கண்ணீர் சொரிகிறது

மாமியார் உறவு எனினும்
எம் மனம் நிறைந்த தாய் நீயே!
நாவினிக்கப் பேசி எம்மை
நன்றே ஆதரித்தாய்
பொழுதெல்லாம் எம்முடனே
பொன்மொழிகள் நீயுரைப்பாய்
விழுதாய் எமைக் காத்த தாயே
விண்நோக்கிப் பறந்தனையோ

ஊருக்கு உகந்தவள் நீயம்மா
உள்ளத்தால் உயர்ந்தவள் நீ!
பேருக்கு வாய்த்தாற் போல்
பெரும் புகழ் படைத்தவள் நீ!
அன்னமிட்ட கையம்மா நீ!
அரவணைக்கும் அன்புள்ளம்
சின்னவர்கள் எமை விட்டுச்
சிறகடித்துப் பறந்தனையோ

போய் மீண்டும் எம் சந்தடிக்குள்
பிறப்பெடுத்து வந்திடம்மா
தூய்மைநெறி சைவத்தின்
சுந்தரத் தமிழரசி
வாய்மையும் செயலும் என்றும்
வாழ்ந்திடவே நடந்தவளே!
தூய ஒளிச் சுடர் இறைவன்
சுகமெல்லாம் கிடைக்கட்டும்

## மச்சான்மார் மதினிமாரின் நினைவுத் துளிகள்

மச்சாள் என்றழைப்பதற்கு
வாய்த்த பெண் கொடியே
மச்சான்மார் மதினியரின்
மனங்களிலே வாழ்பவளே!
தமிழர் பாரம் பரியங்களின்
தலைசிறந்த தாய் நீயே!
நிழலாய் எல்லோர்க்குமென்றும்
நின்று ஜொலித்தவளே!

ஆலய வழிபாட்டின் அன்னை
அழகான தேவரசி
நெற்றியிலே திருநீறும்
நிறைவான பொட்டழகும்
என்றும் கலாசார மாண்பு
எடுத்தாளும் தனிச்சிறப்பு
நன்று கண்டோம் மச்சியரே
நாமென்று உனைக்காண்போம்!

மனிதம் நிரம்பிய பெண் நீ
மலர் போன்றமென் மனத்தவள் நீ!
உறவுகளை ஊரவரை
உளமார நேசிப்பதில்
திறமையான மூத்தவள் நீ!
திடம்கொண்ட "சின்னப்பிள்ளை"
மறைந்து நீ போனாலும் மச்சியரே
மறுபடியும் எமக்குள் பிறந்துவிடு
"ஓம் நமசிவாயம்"

*கவிதைத் தொகுப்பு :*
கலாபூசணம்
***க. தணிகாசலம்***
*திருப்பழுகாமம்.*

## உளம் உடைந்து கதறி அனல்பட்ட மெழுகாக உருகும் உன் பிள்ளைகள் நால்வர்

பத்து திங்கள் எமைச் சுமந்து பாரினில் ஈன்றெடுத்தாய் - தாயே
பாரில் உள்ளோர் உனைப் போற்ற பதறுதம்மா எம் இதயம்
பொன்னான கைகள் உமக்கு
கொடுத்தானோ இறைவன் அன்று
தந்தை முகம் நாம் அறியோம்
தனிமையுடன் வளர்த்தாயே நீயும்

தெய்வம் நேரில் வந்தது போல்
மனம் மகிழ்ந்தோம் நாங்கள் அன்று
தெய்வமே உன்னை எமைவிட்டு
அழைத்தானோ? அங்கு
எங்கே காண்போம் தாயே
என்ன பாவம் செய்தோம் நாங்கள்

பாசமே உன் உருவம் அம்மா
பார்த்தனர் இப் பாரில் உள்ளோர்
அன்புத் தெய்வம் உனை இழந்து
அநாதைகள் ஆனோம் நால்வர்
அம்மா என அழைக்கும் போது
எம்மை அணைத்த கைகள்
அம்மா என கதறி அழும் போது - எம்மை
அணைக்கவில்லை ஏனோ ? அம்மா

அன்பினால் மகளே என அழைத்த உதடுகள் இப்போ
சத்தம் இன்றி மௌனமாக உறங்குவது ஏனோ? அம்மா
ஏங்கித் தவிக்கின்றோம் தாயே
ஏழைக் குழந்தைகள் நால்வர்
எங்கே அம்மா சென்றாய் - நீயும்
எப்போது காண்போம் உன்னை

தினமும் எம்மை காண்பதற்கு கண்விழிக்கும் கண்கள்
ஞாயிறவன் வருகையிலே - கண்
விழிக்கவில்லை ஏனோ? அம்மா
இன்னும் ஒரு ஜனனம் வேண்டும் தாயே
நீயே எமக்கு தெய்வத் தாயாக - உன்
வயிற்றில் பிறக்கவே தவம் இருப்போம் நால்வர் இங்கு
தெய்வத் திருமகளே சொர்க்க வாசல் சேருமம்மா

இறையாகி வேண்டி இறைவனடி சேர இரங்குகின்றோம் இறைவனிடம்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உமது பிரிவால் ஏங்கித் தவிக்கும்
பிள்ளைகள் நால்வர்
**கண்மணி, பூரணம்மா, பஞ்சவர்ணம், அபிராமி**

# என்றுமே நீங்காத நினைவுகளில் எங்கள் அன்பு அம்மம்மாவே..........

''பிறந்தவர் மடிவது மண்ணில் நிஜம் என்றாலும் மனது வெதும்புகிறது அம்மம்மா'' பண்டாரியாவெளியை பிறப்பிடமாக பெருமையுடன் வாழ்ந்த மாணிக்கப்போடி மூர்த்திப்பிள்ளை தம்பதியினரின் தவப்புதல்வியாக இரட்டைப் பிள்ளைகளில் ஒருவராய் பிறந்து கன்னங்குடாவைச் சேர்ந்த செம்பாப்போடி தம்பதியினர்களின் மூத்த மகனான பாலிப்போடியை கரம்பிடித்து பண்டாரியாவெளியில் 01 ஆண் 05 பெண்களுடன் களுமுந்தன்வெளி வந்து 48 வருடங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து தன் கணவர் இறப்பைத் தொடர்ந்து பிள்ளைகளுடன் இன்ப துன்பங்களை கடந்து 89வது வயதினை 2016.03.21 அடையும் தறுவாயில் 2016.01.10 அன்று எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்று விட்டீர் அம்மம்மா! இருந்தும் அம்மம்மா வீட்டுக்கு வருபவர்களையோ சொந்தப் பிள்ளைகளையோ வெறுங்கையோடு வெறும் மனதோடு திருப்பி அனுப்பிய சரித்திரமே இல்லை. சிரித்த முகத்துடனே வா மகனே, மகளே, மெனே என்று அன்பு பொக்கிசத்துடன் கூப்பிட்டு அரவணைத்து முழுமன நிறைவோடு சாப்பாட்டு தின்பண்டங்களை பக்குவமாய் ஒழித்து வைத்து வெவ்வேறாக பகுத்து வைத்து "இலகு காத்த கிளி போல் கட்டிலில் இருந்து" கண்டதும் இன்ன சாமான் வைத்திருக்கிறேன் என்று எடுத்து தருவீர்களே.. சாப்பிட, அம்மம்மா ஆசையுடன் நலம் விசாரிப்பதில் வல்லமையுடைய அம்மம்மாவே எப்ப மகள் வேலை கிடைக்கும் படிப்பு எப்படி என்று விசாரித்து படிப்பு பற்றியும் படிக்கும் விதம் வேலை எடுக்க முயற்சி செய்யும்படி உந்துதல் வழுங்குவீர்களே ஊரில் படித்த எல்லோரையும் முன் உதாரணங்களோடு சொல்லுவீர்களே தெரியாத விடயம் எல்லாம் எங்கள் அம்மம்மா செய்தியாளர் போல் எல்லாமே சொல்லுவீர்களே இதையெல்லாம் எப்படி அறிந்து கொள்கிறாயோ யாம் அறிவோம் அம்மம்மா நாங்கள் வேலை கிடைத்ததும் உன் கடமையை சரியாக களியடங்க செய்ய வேண்டும் என்று பகல் கனவு கண்டோமே

அம்மம்மா வாழ்ந்த தறுவாயில் எதிர்பார்த்திருக்கவில்லை உன் மரணத்தை நாங்கள் நோய், பிணியில் என்று எதிர்பார்திருக்காமல் தூங்கி நிறுத்தாமலே யாரிடமும் எதுவுமே சொல்லாமல் உன் வாய் வார்த்தைப்படி நான் இருந்தப்பவே இறைவன் கொண்டு செல்வான் என்று வார்த்தையாய் சொல்வது வழமை அதுபோல் 89வது வயதினில் 2016.01.10 அன்று உயிர் பிரிந்த செய்தியே எமக்கு பரிசாக கிடைத்தது அம்மம்மாவே நாங்கள் கண்டது கனவா? இல்லை நிஜந்தானா? என்றுமே ஜீரணிக்க முடியாமல் பாவிமனம் உன் இழப்பை ஏற்க மறுக்கிறது மனது வெதும்புகிறது அம்மம்மா எங்கள் ஆசைப்படி இன்னும் ஈராண்டு வாழ இருக்கவில்லையே அம்மம்மா என்றும் நீங்கா நினைவுகளாய் இருக்கின்றீர்களே

அம்மம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*என்றும் பிரிவுத்துயரில்*
*பேரப்பிள்ளைகள்*
***நந்தினி, குட்டி, சரஸ், சசி, வவி, மூர்த்தி, தர்சா, டுசா, நீதன், லிஜா***

# கண்ணீர் துடைக்க வரமாட்டீர்களோ?

சசி என்று சுட்டி அழைத்திடும்
என் கெட்டி அம்மம்மாவே
உன் கடமையை எனக்கு செய்திட்டாய்
சசி மகளே எனக்கு இனி கடன் இல்லை என்பாயே

என் மறு வளர்ப்புத் தாய் நீயம்மா
என் மகன் வேதிஜனை பார்த்து
குறும்புகளை தங்கமகன் துள்ளன் துள்ளனே
என்று கட்டியணைத்து மடியில் வைப்பாயே

கண்டது உன துள்ளம் பூரித்து சிரிப்பாயே அம்மம்மா
எனது மகனிடம் பாட்டி என்று உனைச்
சொல்லும் போது பாட்டியம்மாட்ட போக
என்று ஓடிப்போய் வாட்டாவை போடுவர்

இனி எனக்கு சசி என்று கூப்பிட்டு
சாப்பாட்டு சாமான்களை தருவதற்கு வேறு
யாரிருக்கா என் அன்புக் கடல் அம்மம்மாவே
உன் பிரிவு வாழ்வை சோகமாக்கி விட்டதே

*பேரப்பிள்ளைகள்*

***தில்லைநாதன் - சசி, (சோதி), வேதிஜன்***

# என் ஆசை அம்மம்மா எங்கே

அன்பால் அரவணைத்த
பாசத்தால் பதறவைத்த என்
ஆசை அம்மம்மா எங்கே

பள்ளி சென்று வீடு வரும்
வரைக்கும் என்னை பார்த்துக்
கொண்டிருக்கும் என்
ஆசை அம்மம்மா எங்கே

அம்மா வீட்டில் சமைக்காவிட்டால்
பெரியம்மாமார் உமக்காக தரும் உணவை
நீங்கள் உண்ணாமல்
எனக்காக வைத்திருக்கும் என்
ஆசை அம்மம்மா எங்கே

அம்மா திட்டினால் எனக்காக
அம்மாவுக்கு எதிர் குரல் கொடுப்பீர்களே
இனி யார் இருக்கா அம்மம்மா
எனக்கு சார்பாக குரல் கொடுக்க

அப்பா சித்தப்பா அதட்டினால் உன்னிடம்
தஞ்சமடைவேன் இனி
யாரிடம் சென்று தஞ்சமடைவேன்
என் ஆசை அம்மம்மா

யாராவது ஏதாவது வாங்கி வந்தால்
உண்ணாமல் எனக்காக வைத்திருக்கும்
என் ஆசை அம்மம்மா எங்கே

உமக்கு யாராவது பொருட்கள் வாங்கி வந்தால்
உண்ணாமல் நான் வாங்கி வரும் பொருட்களை மட்டும்
வாங்கி உண்ணும் என் ஆசை அம்மம்மா எங்கே

மாமா என்மீது பாசம் வைத்திருந்தார்
அவரை என்னை விட்டுப் பிரித்தான் காலன்
நீங்கள் அவரை விடவும் பாசம் வைத்திருந்தீர்கள்
பொறுக்கவில்லை பொல்லாத காலனுக்கு
என்னை விட்டு உனை பிரித்தானே
என் ஆசை அம்மம்மா

சூரியனவன் (ஞாயிறு) உதயத்திலே
சுத்தமான விடியற் காலையிலே
பூ மலரும் வேளையிலே
புண்ணியத் தாய் நீயும்
சுவர்க்கம் சென்றாயோ
என் ஆசை அம்மம்மா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவுத் துயரில் பேரன்*
*லிதுர்சன், (நிதன்)*

# நல்வாழ்வின் நற்பண்புகள்

- பொறுமை
- சுறுசுறுப்பு
- அர்ப்பணிப்பு
- சிக்கனம்
- சேமிப்பு
- நன்றி கூறல்
- உதவி செய்தல்
- எளிமையான வாழ்க்கை
- மகிழ்வுடன் இருத்தல்
- தவறுகளை ஏற்றுக் கொள்ளுதல்
- கவனமாக செவிமடுத்தல்
- கருணையுடன் செயற்படல்
- தைரியமாய் இருத்தல்
- நல்லெண்ணத்துடன் செயற்படல்
- ஏனையோர் மனதை புண்படுத்தாமை
- எல்லோரிடனும் அன்பாகப் பேசுதல்
- ஏனையோரிடத்தில் நல்லதை இனம் காணுதல்

# நெஞ்சம் ஏங்குதம்மம்மா

## அம்மம்மா!!!

அன்பின் பொக்கிசமே எமைவிட்டு பிரிந்தது ஏனோ?
அன்பாய் எங்களை அரவணைத்த கரம் எங்கே? அம்மம்மா
ஆருயிரே இன்று மண்ணுலகம் மறந்தது ஏன் அம்மம்மா
அலறி அழுதாலும் உமை எங்கே காண்போம் தாயே

என்ன பாவம் செய்தோம் நாங்கள் உமை கடைசியாய் காணாமல்
ஏங்கித் தவிக்கின்றோம் இனிமேல் யாரிருக்கா?
கடல் கடந்து நாங்கள் இருவர் சென்றும் உன் நினைவோடு
தினம் இருந்தோம் நிலைகுலைய வைத்தது ஏன்? அம்மம்மா

உனை நாங்கள் காண்பதற்கு வருவோமே என்றோம்
வரும் வரை பொறுக்கவில்லை ஏனோ? அம்மம்மா
இறந்த செய்தி நாம் அறிந்து அலறி அழுதும்
இருந்தும் நீங்கள் மறைந்தது நிஜமா? அம்மம்மா

உன் இறப்பை நினைக்கையிலே ஏற்க மறுக்குதம்மம்மா எம் நெஞ்சம்
குடும்ப பொக்கிசமாய் மிளிர்ந்தீர்கள் - அம்மம்மா
தூண்டாமணி விளக்கு அணைந்தது ஏனோ?
எந்த ஜென்மத்தில் காண்போம் அம்மம்மா உனை

என்ன வாழ்க்கை தெரியவில்லை எமக்கு
அம்மம்மா என்றாலே மறுதாய் நீயம்மம்மா
அன்பாய் எங்களை அணைப்பாயே - நீயும்
அன்னை மடி விட்டு சென்றதேனோ? விண்ணுலகம்

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உன் பிரிவால் ஏங்கித்தவிக்கும்*
*அன்புப் பேரன்மார்*
*குட்டி, மூர்த்தி (கட்டார்)*

# அன்புப் பேத்தி லியாவின் கெஞ்சுதல்

"செல்ல மகள்" என்று என்னைத் தினமும் அணைப்பாயே – அம்மம்மா
சென்றனையோ இறைவனடி யாரிடமும் சொல்லாமல்
நான் செய்யும் குறும்புகளை எல்லாம் நாள் தோறும்
நல்லபடி மனமகிழ்ந்து சிரிப்பாயே – அம்மம்மா
நாட்கள் சில கழிந்தாலும் உம்மை இங்கு காணாமல்
சிறு இதயம் பதைக்கிறது அம்மம்மா
எங்கே சென்றீர்கள் எனை விட்டு தொலைதூரம்

சிறுகுழந்தையாக இருக்கையிலே – நீங்களும்
சில கணத்தில் என்னை ஏமாற்றி சென்றாயே
உன் பேரப்பிள்ளைகளில் சிறியவள் நானென்றா
உன் அன்பை எனக்காக அர்ப்பணித்தாய் அம்மம்மா
பிறந்து சில மாதம் தாய்மாமன் நான் இழந்தேன்
பிறந்தும் ஐந்தாண்டு இல்லை உனை நானிழந்தேன்
குட்டிப் பிள்ளை நான் பட்டுச்சேலை அணிந்து வர
சுட்டித் தனமாக எனை அள்ளி அணைத்தாயே அம்மம்மா
பட்டுச்சேலை கட்டும் பருவம் வரை பொறுக்கவில்லை ஏனோ?

அம்மா உனைப் பார்க்க வரும் போதெல்லாம்
உனைப்பார்க்க நான் தினம் தோறும் வருவேனே – அம்மம்மா
நோய் என்று வரும்போது மாத்திரை கேட்பாயே
விரைந்தோடி நானும் அம்மாவிடம் வாங்கி வருவேனே
இனிமேல் என்னை அணைக்க யாரிருக்கா?
எனைக் கொஞ்ச யாரிருக்கா? அம்மம்மா?
அறியாத வயதினிலே புரியாமல் உன் முகம்
காணாமல் ஏங்கித் தவிக்கின்றேன் சிறு பிள்ளை நானும்
உங்கள் "ஜீவாத்மா பரமாத்மா அடியில் சேர பிரார்த்திக்கின்றேன்"

உன் பிரியமுள்ள
கடைசி பேரப்பிள்ளை T. லிர்திகா/லியா

# கண்ணீர் துளிகள் வழிகளாய்......

அன்பை ஊட்டிய அட்சய பாத்திரமே அப்பம்மா
அகிலத்தில் உனக்கு நிகர் நீயே அப்பம்மா
நீ பெற்ற உறவுகள் இங்கிருக்க
நிர்க்கதியாய் எமை விட்டு போனாயே....

சொட்டுச் சொட்டாய் என் உதிரம் இங்கு சொட்ட
சொர்க்கத்தை நீ தேடி போனதேனோ அப்பம்மா
உன்னோடு உயிரான உறவுகளை விட்டு
காலனவன் பறித்துக் கொண்ட மாயமென்ன

அப்பம்மா என்றழைக்க நீயுமில்லை
உன்னைப் போல் பார்த்துவிட யாருமில்லை
அழுது அழுது தீர்க்கிறோம் அப்பம்மா
அமைதியாய் நீயானாய் அப்பம்மா

மரணம் எனும் விதி உனை அணைத்த போதும்
மனதினுள் என்றும் நீ சுடரானாய்
உன் நினைவை தினம் இங்கு நான் சுமந்து
உன் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திப்போம்

*பேரப்பிள்ளைகள்*

***வதனி, மகா, வனோபிகா, ஜீவிதா, மதன், விபுல், தனு***

*பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது*
*கேட்பதல்ல - அது ஆன்மாவின் ஏக்கமாகும் (காந்திஜி)*

# தங்க நிகர் பெரியம்மா போயினையோ

அன்பின் திரு உருவே பொறுமையின் சிகரமே
பெரியம்மா, கதறுவது கடுகளவும் கேட்கவில்லையோ
உன்னதமாய் வாழ்ந்து உமை உலகறிய வைத்தீர்
உத்தமியாய் பண்டாரியாவெளி ஊரில் பூத்தாயே

களுமுத்தன்வெளி தனிலே வாழ்வு அமைத்து
ஆறு செல்வங்களையும் அன்பாக அரவணைத்து
உறக்கமது தான் துறந்து ஊக்கமெலாம் காட்டி
உந்தன் பிள்ளைகள் உயர்வடைய வழி சமைத்த தாயே

உந்தன் சகோதரிகள் மனம் வெதும்பி ஏங்கையிலே
உடன் பிறவா பிள்ளைகள் உதிர்க்கிறார் கண்ணீரை
சொந்தங்களான உறவுகள்
சோகத்துடன் எமைப்பார்க்க எம்மனது பொறுக்கல்லையே

அன்பான வார்த்தை பேசும் அருமை பெரியம்மா
பண்பான மக்கள் பாசமுடன் பார்த்து நிற்க
யாருக்கும் சொல்லாமல் யாமத்தில்
உன் உயிர் துறந்தது ஏனோ!

***உன் பிரிவால் துயர் உறும் ஒன்றுவிட்ட மக்கள்***
***பரிமளம், றோகினி, விஜி, நளினி, ருதுகுமார்,***
***சந்தனப்பிள்ளை, கணேசமூர்த்தி, சிவஞானம்,***
***சுந்தரலிங்கம், காளியம்மை, ஞானம்மா***

*நீ அமைதியாக வாழ விரும்பினால்*
*சந்தேகப் பேர் வழியாக இராதே (மகான்)*
*உலகம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாக*
*உங்கள் இதயத்தை பெரிதாக்குங்கள் (விவேகானந்தர்)*

## "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் – வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவா"

களுமுந்தன்வெளியில் கலிங்க குலத்தில் உதித்து பாலிப்போடியை கணவராக கரம் பிடித்து செல்லமாய் பிள்ளைகளைப் பெற்றெடுத்து பெருமை மிக்கவளாய் சின்னப்பிள்ளை என்னும் உயர்வோடு வாழ்ந்தாய் பிள்ளைகளை கல்வியில் மேம்பட கஸ்ரப்பட்டு படித்து ஆளாக்கி உயர்வாக போற்றிட வழியமைத்தாய் மக்களின் சேவையில் ஈடுபட அபிராமியை சுகாதார சேவையில் இணைத்த பெருமை மிக்கவளாய் நீங்கள் உள்ளீர்கள். ஆல விருட்சம் போன்று உமது உள்ளத்தால் மக்களுக்கு நிழல் கொடுத்தாய் வெள்ளை உள்ளமும் அன்பாக பேசும் திறமையும் முகத்தில் உம்மிடம் இருந்த புன்சிரிப்பும் நிலையில்லாமல் போனது காலனின் வழியிலேதான் காலனவன் கண்சிமிட்டும் நேரத்திற்குள் உம்மை விண்ணுக்கு கொண்டு சென்று விட்டான். உமது பிரிவால் துயருறும் பிள்ளைகளுக்கும் சொந்தங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு உமது ஆத்மா நல்லமுறையில் சாந்தியடைய நாமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*இவ்வண்ணம்*
*வைத்திய அத்தியட்சகர்*
*வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள்,*
*ஊழியர்கள்.*
*ஆதார வைத்தியசாலை,*
*களுவாஞ்சிகுடி.*

*தேடல் குறிப்பு :*

## *அபரக் கிரியையில் சில மரபு முறைகள்*

பிரண்டைத்துண்டு வைத்தல் : பிரேத புதையலின் மேல் தலை, வயிறு பாதம் ஆக முறையே மூன்று இரண்டு, ஒன்று என வைக்க வேண்டும். இதன் நோக்கம் உயிர் மும்மலங்களில் இருந்து விடுபட்டு முத்தியடைய வேண்டும் என்பதாகும்.

வைகுந்த அம்மானை பாடுதல் : பிரேதம் அடக்கம் செய்த பின்னர் கழுவிய வீட்டில் பிரேதம் வைக்கப்பட்ட இடத்தில் வெள்ளை துணி மூடிய நீர் நிரம்பிய செம்பும் விளக்கும் மயானத்திற்கு கொண்டு சென்ற மண்வெட்டி, கத்தி,போன்ற உபகரணங்களையும் கழுவி அவ்விடத்தில் வைப்பர். முதல் நாள் இரவு இரண்டாம் நாள் இரவு, மூன்றாம் நாள் இரவு, என ஒவ்வொரு இளநீராக வைக்கப்படும் முதல் நாள் தொடக்கம் எட்டாம் நாள் வரை வைகுந்த அம்மானை பாடப்படும்.

இது பஞ்சபாண்டவர்கள் வைகுந்தம் சென்ற வரலாற்றை சித்தரிப்பதாகும். இதன் மூலம் உடல் நிலையாமை, பாவபுண்ணிய பலன், இறைவன் மீது ஆழ்ந்த பக்தி ஏற்படுகின்றது. ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிபாடாகும், வைகுந்த அம்மானை 31ம் நாள் அந்தியேட்டி கிரியை அன்று வாழி பாடி வைகுந்த அம்மானை பாடும் நிகழ்வு நிறைவடையும்.

மூன்றாம் நாள் கிரியை - உயிர் பிரிந்த நாள் முதல் பிரேதம் அடக்கம் செய்த மூன்றாம் நாள் மாலை வேளையில் கடமை செய்தவரால் பிரேதம் இருந்த இடத்தில் பொங்கல் படைக்கப்படும். அவ்வேளையில் இருளாக்கப்படும், பல்லியின் ஒலி மூன்று முறை கேட்பதற்காக எல்லோரும் அமைதியாக இருப்பார்கள். பல்லி ஒலி எழுப்பிய பின்னர் படையலுக்கு திருமுறைபாடி படையலில் வைத்த பொங்கல் பழ வகைகளையும் சுடர் திரியுடன் தெருவில் ஓரமாக வைத்து கொண்டு கும்பிட்டு பின் படையலை அனைவரும் உண்பர்.

எட்டு வைத்தல் - எட்டாம் நாள் இரவு கடமை செய்தவரினால் மறைக்கப்பட்ட (அடைக்கப்பட்ட) இடத்தில் சோறு, ஏழு மரக்கறி, பலகார வகைகள், சமைக்கப்பட்டு பிரேதம் இருந்த இடத்தில் படைக்கப்படும் அதில் தின்பன, பருகுவன, மாமிசங்களும் படைக்கப்படுகின்றன. இது இரவு வேளையில் நடைபெறுகின்றது. அச்சமயம் வெளிச்சங்கள், தவிர்க்கப்படும் பல்லியின் மூன்று ஒலிகள் எதிர்பார்க்கப்படும் பின்னர், படையலில் வைத்த பொருட்களில் சிறிதளவு எடுத்து சுடர் திரியுடன் தெரு ஓரமாக வைத்துவிட்டு படையல் வைத்தவர். நீரினால் கைகளைக் கழுவித் திரும்புவர் இவற்றை பூத பிசாசுகள் உண்ணும் என்பது ஐதீகம் இறந்த ஆத்மாவின் பசியையும். தாகத்தையும் தீர்ப்பதற்காகவே இவ்வாறு இடம்பெறுகின்றது.

31ம் நாள் - 30ம் நாள் மாலையில் 8ம் நாளில் படைக்கப்பட்டது போல் படைக்கப்படும். ஆனால் மாமிசங்கள் தவிர்க்கப்படும் இரவு முழுவதும் வைகுந்த அம்மானை பாடப்பட்டு அதிகாலை வாழி பாடப்பட்டு முடிக்கப்படும். அடுத்த நாளே அந்தியேட்டிக் கிரியை இடம்பெறும் அவ்வேளையில் அன்னதானம் வழங்கப்படும்.

உடலை விட்டுப் பிரிந்த உயிர் 31ம் நாள் கிரியையுடனே அது செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்லும் சங்கொலியினால் பிதிர்கள்நற்கதி அடையும் என்பது நம்பிக்கையாகும்.

41ம் நாள் எதிர்பாரத தடைகள் ஏற்பட்டால் 31ம் நாள் செய்யப்படும் கருமங்கள் 41ம் நாளில் நடைபெறவேண்டும் தற்கொலை, நீர்நிலைகளினூடாக, மலைகளினூடாக தேசாந்திடம் சென்று உயிர் பிரிந்தவர்களுக்கு 41ம் நாளிலே கிரியைகள் செய்ய வேண்டும், ஆனால் விபத்தில் இறந்தவர்களுக்கு ஆறு மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் கிரியை நடத்த வேண்டும்.

ஆண்டு திவசம் - ஒரு வருட முடிவிலே செய்யப்படுவது ஆண்டு திவசமாகும். இறந்த திகதியில் செய்யும் இந்த சிரார்த்தத்துடன் அபா... கிரியை நிறைவு செய்யும்.

மஹாளயம் – புரட்டாதி மாத அபரபக்க பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் இக்காலமாகும்.

ஒருவர் இறந்த தினத்தில் அவருக்கு சிராா்த்தம் செய்தல் வேண்டும் இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் வரும் அமாவாசையில் செய்ய வேண்டும். இக்காலத்தில் பிதிா்கருமம் செய்வதால் வருடம் முழுவதும் செய்த பலன் கிடைக்கும்.

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

"நாளென ஒன்று போற் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

# பொன் மொழிகள்

தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் ஆனாலும் சரி, தெய்வ நம்பிக்கை இல்லாதவர் ஆனாலும் சரி, எந்த மார்க்கத்தை சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி அவர்களுக்கு தியானம் அவசியம் தேவை

- பாரதியார்

நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில் அதை சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை

- ராஜாஜி

வேலைகளை உடனடியாகச் செய்வதற்கு ஒரு தேதியை குறிப்பிட்டு விட்டால் அந்த தேதியில் அதைச் செய்து முடிக்கும் முயற்சியில் உயிரே போவதானாலும் பின் வாங்கக் கூடாது.

- காந்தி அடிகள்

கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றம் குறையை உணராமல் எவன் இருக்கின்றானோ அவன் தான் சரியான குருடன்

- காந்தி அடிகள்

உண்மையைச் சொல்வதற்காக தூக்குமரம் ஏறவேண்டியது வந்தாலும் தயாராக இருங்கள்

- காந்தி அடிகள்

தேகப் பயிற்சி செய்தால் எப்படி உடல் உறுதி பெறுகிறதோஅதே போல் தர்மம் செய்யப் பழகிக் கொண்டால் மனமும் ஆத்மாவும் விருத்தியடையும், தர்மம் செய்யாமல் உயிர் வாழ்வோமானால் மனிதர்களாகிய நமக்கும் மிருகங்களுக்கும் என்னதான் வித்தியாசம்?

- பண்டிதர் நேரு

வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்

- டாக்டர் இராதாகிருஷ்ணன்

பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும் கிராமங்கள் முன்னேறும், தேசமே முன்னேறும்.

- இந்திரா காந்தி

சேவை என்பது மற்றவர்கள் நம்மை பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

- தந்தை பெரியார்

வாழும் கலைப் பயிற்சியானது ஒவ்வொரு மனிதனுக்கும் அருமருந்தாக அமைகிறது.

- விசு

பாத யாத்திரை ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வருடமும் மேற்கொள்வதன் மூலம் கல்மண், புல், பூண்டு, பட்டு உடலுக்கு சக்தி ஏற்படுகின்றது.

- கதிர்பாரதி

## பக்தியுடன் இறைவனை வேண்டுகின்றோம்!

பண்டாரியாவெளி பற்றுள்ள மண் ஈன்ற
பரம்பரை தமிழ் குலத்தில் வாழ்ந்த
பண்புடையாள் பாலிப்போடி சின்னப்பிள்ளை
பரகதியடைந்தார் களுமுத்தன்வெளி ஊரிலே
பக்குவமாய் எல்லோரையும் எக்காலமும்
பற்றுடனே உபசரிக்கும் உண்மை மாது
படைகள் வந்து தடை போட்ட காலத்திலும்
பயமின்றி பதில் கூறும் வீரத்தாய்
பழமை மாறாத கலை உணர்வும்
பயிர் செய்கை நிலத்தின் அதிபதியும்
பட்டி மாட்டு பண்ணைக்கு உரிமையுமாய்
பல்லாண்டு எண்பத்தி ஒன்பது அகவையில
பரமசிவன் திருவடி சரணடைந்தார்
பலரையும் மதிக்கின்ற நல்மனமும்
பக்குவமான பலர்போற்றும் பிள்ளைகளும்
பற்றுடனே வளர்த்திட்ட தாய் இவரே
பகல் இரவாய் இறைபணியும்
பணிந்து சேவையாற்றிய அம்மா
பகட்டுகள் அறவே இன்றி வாழ்ந்து
பரிதவிக்க எமைவிட்டு ஈசனடி சேர்ந்தார்
பரிபூரணமாய் ஆத்மா சாந்தி பெற
பக்தியுடன் இறைவனை வேண்டுகின்றோம்
பரம் பொருளை எந்நாளும் வணங்குகிறோம்.

"இரதாலயம்"
அம்பிளாந்துறை.

பாக்கியச்செல்வம் அரியநெத்திரன் (அரியம்)
தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னாள் பா.உ

# வரலஷ்மி விரதம்

சுமங்கலிகள் செய்ய வேண்டிய விரதமிது இந்த தினத்தில் தான் மகாலஷ்மி சாயங்காலத்தில் பாற்கடலிலிருந்து தோன்றினார். அன்று உபவாசம் இருந்து திவ்விய அலங்கார மண்டபத்தில் கலசத்தில் இலட்சுமியை ஆவாகனம் செய்து 9 முடியுள்ள நோன்பு கயிற்றைத் தரிக்க வேண்டும் இதை அனுஸ்டிக்காத ஒரு இராணி ஏழையானாள். அனுஷ்டித்த ராஜகுமாரி சக்கரவர்த்தியானாள் என்ற கதை முதலியவைகளை பத்மபுராணம் வர்ணிக்கிறது.

மாச தானங்கள்

| | |
|---|---|
| சித்திரை மாதம் | - ஐந்துவகைப் பண்டங்கள் |
| வைாசி மாதம் | - வெல்லம் |
| ஆனிமாதம் | - தேன் |
| ஆடி மாதம் | - வெண்ணெய் |
| புரட்டாதி மாதம் | - சக்கரை |
| ஐப்பசி மாதம் | - பாயசம் |
| கார்த்திகை மாதம் | - பால் |
| மார்கழி மாதம் | - அரியதரம் என்றும் பலகாரம் |
| தை மாதம | - தயிரேடு |
| மாசி மாதம் | - நெய் |
| பங்குனி மாதம் | - தேங்காய் |

வாரதான பலன்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | பாயசம் | ஆரோக்கியம் |
| திங்கள் | பால் | சந்ததி வளரும் |
| செவ்வாய் | வாழைப்பழம் | செல்வம் |
| புதன் | வெண்ணெய் | மனச்சாந்தி |
| வியாழன் | சர்க்கரை | ஞானம் |
| வெள்ளி | வெள்ளைச்சக்கரை | பக்தி |
| சனி | பசுநெய் | ஆயுள் |

தச தானங்கள்

| | |
|---|---|
| கோதானம் | வஸ்திர தானம் |
| பூமிதானம் | தானிய தானம் |
| எள்ளுதானம் | வெல்லதானம் |
| சுவர்ண தானம் | வெள்ளிதானம் |
| நெய் தானம் | உப்புத்தானம் |

திதி பூஜாதான பலன்

| | | |
|---|---|---|
| பிரதமை | நெய் | நோய் அகலும் |
| துதியை | சர்க்கரை | ஆயுள் விருத்தி |
| திரிதியை | பால் | துக்கங்கள் அகலும் |
| சதுர்த்தி | பக்ஷணம் | விக்கினம் அகலும் |
| பஞ்சமி | வாழைப்பழம் | புத்திக் கூர்மை |
| ஷஷ்டி | தேன் | உடல்நாத்தி |
| சப்தமி | வெல்லம் | சோகம் அகலும் |
| அஷ்டமி | தேங்காய் | பாவங்கள் அகலும் |
| நவமி | பொரி | இம்மை தரும் |
| தசமி | எள்ளு | யமபயம் நீங்கு |
| ஏகாதசி | தயிர் | தெய்வபக்தி உண்டாகும் |
| துவாதசி | அவல் | பிரனேம பக்தி உண்டாகும் |
| திரயோதசி | கடலை | சந்ததி உண்டாகும் |
| சதுர்தசி | சத்துமாவு | சிவானுக்கிரகம் கிடைக்கும் |
| பௌர்ணமி<br>அமாவாசை | பாயசம் | பிதுருக்களுக்கு நற்கதி |

# உண்மையின் நிஜம்

| | |
|---|---|
| நட........ ........................ | அதிர்வின்றி |
| பேசு .......................... | பணிவாக |
| உண்ணு ...................... | அளவாக |
| சுவாசி............................ | ஆழமாக |
| தூங்கு .......................... | அமைதியாக |
| உடுத்து.......................... | அழகாக |
| செயல்படு...................... | அச்சமின்றி |
| உழை.......................... | உண்மையாக |
| சிந்தி............................ | சுயமாக |
| நம்பு............................ | சரியாக |
| பழகு.............................. | நாகரீகமாக |
| திட்டமிடு........................ | முன்னதாக |
| ஈட்டு.............................. | நேர்மையாக |
| சேமி.............................. | சிறிதாவது |
| செலவிடு........................ | யோசித்து |
| நேசி.............................. | பேதம் கடந்து |
| படி.................................. | முடிவின்றி |
| நில்.............................. | துணிவோடு |
| மரணி............................ | பயமின்றி |

"காலத்துக்கு பாகுபாடு கிடையாது
யார் மீதும் அதற்கு பாரபட்சம் இல்லை"

(தர்மஸ்மான்)

"வாழ்க்கை இரண்டு பகுதிகளையுடையது
சென்ற காலம் ஓர் கனவு வருங்காலம் ஓர் ஆசை"

(மகான்)

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்துத் துழாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்ட தென்ற சாம்பலும் எங்கே

கண்களில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாமொரு யாத்தரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளித் தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# பொக்கிசம்

விருட்சமே தாயே விலையுயர் பொக்கிசமே
அருமருந்தே இன்று அரனடி நீர் சேர்ந்தீர்
வருந்துகிறோம் நாங்கள் வாடித் துடிக்கின்றோம்
திரும்புவாய் என்று திசைபார்த்தழுகின்றோம்

பேரப்பிள்ளைகளும் தாயே பேரர்களின் பிள்ளைகளும்
ஊரவரும் உறவினரும் உடன் பிறந்த சோதரரும்
பார் போற்றும் பிள்ளைகளும் பக்கத்து வீட்டாரும்
ஊர்ந்த கண்ணீர்தான் ஊரில் பெருவெள்ளமம்மா

சின்னப்பிள்ளை யென்றால் சிறுபிள்ளை நோய்தீர்த்த
புண்ணியவான் என்று புகழுகிறார் பலரும்மை
எண்ணிப் பார்க்கொணா எத்தனையோ நோய் பிணியை
துண்ணியமாய் தீர்த்த தூயவளே தாயே நீர்

ஓர் மாதமல்ல ஓராண்டு பல்லாண்டாய்
பாருள்ள ஓராண்டும் ஊராளும் உன் நாமம்
ஊராள மீண்டும் நீர் உம்முறவில் உதிக்க வேண்டி
பாராண்டோன் பாதம் பணிகின்றோம் தாயே நாம்

*திரு.த. குணநாயகம்*
*(ஆசிரியர்)*
*எருவில்*

**நெஞ்சத்து நினைவுகள்**

நீர் பாச்சி நெல்விளையும் நிலவளம் கொளிக்கும்
சீர் மக்கள் பண்புடை சைவச் சிறப்புடன் வாழும்
சார்புகழ் சிற்றூர் களுமுந்தன்வெளி பதியின் முத்து
சின்னப்பிள்ளையின் சிறப்பு தனிச்சிறப்பு

கிளையுடன் விழுதும் விட்டு விருட்சமாய் உள்ள உறவு
கன்னியமாய் அன்னையாய் இருந்தே இறந்தீர்
இன்னும் சொன்னால் என்னையும் மகன் அன்று அழைப்பது தனியன்பு

வாசல் வந்தவரை வாஞ்சையுடன் அழைத்த அன்னை நீ
என்ன மெனே சாப்பிடு நித்தமும் உன் சத்தமிது என் நெஞ்சில்
இருக்கிறது
நேரமில்லை காலமில்லை உண்ணக் குடிக்க உன்னிடத்தில்
சனி, ஞாயிறு என்றால் காப்புபன் எங்களுக்கு உங்கள் வாசல் தாயே

தரணியிலே பண்டாரியாவெளி கண்ட பிள்ளை சின்னப்பிள்ளை
இல்லறத்தில் வாழ்விடம் களுமுந்தன்வெளி பதி
இரு வெளியும் விட்டினையோ தாயே இறையடிக்கு
அண்ணாமலையான் அடிசேரப் பிரார்த்திக்கின்றேன்
- பிறவளஉன்பிள்ளை
பூவானர் போற்றும் புகழ்துறை சொர்க்கம் சேர
சீர்பாதம் போற்றுகின்றேன் சிவலோகம் சேரத் தாயே
உலகில் பிறந்து பட்ட தெல்லாம் இனியில்லை சேருமிடம் சொர்க்கம்
சேரட்டும் உன் ஆத்மா பற்றற்றான் பாதமதில்

"ஓம் சிவாயநம"

பிரிவுத் துயரில்

**வீ.ஆர். மகேந்திரன்** J.P
(முன்னாள் தவிசாளர் Af. Hro இணைப்பாளர்)

## மனிதன் தினமும் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் (அதிகாலை 3 மணி தொடக்கம்)

01. 3 மணி தொடக்கம் 7 மணி வரை நுரையீரல் நேரம் காலைக்கடன் கழித்தல், உடல் சுத்தம், தியானம் கடவுள் வழிபாடு

02) 5 - 7 மணி வரை பெருங்குடல் நேரம் காலை உணவு அல்லா விட்டால் பித்த நீர் சுரந்து குடல் நோய் (அல்சர்)

03) 7 - 9 மணி வரை முன் சாப்பிட்டால் குடலுக்குள் செல்லும் கண்மணி மயிர் அரைக்கப்படும்

04) 9 - 11 மணி வரை மண்ணீரல் நேரம் சாப்பாடு தவித்தல் நன்று

05) 11 - 1 மணி வரை இதய நேரம் கோபம் கூடாது நோய் உடல் பாதிப்பு ஏற்படும் உணவு சாப்பிடுதல் நன்று

06) 3 -5 மணி சிறுகுடல் நேரம் உடலுக்கு ஓய்வு கொடுத்தல் நன்று

07) 3 - 5மணி வரை உடல் கழிவு வெளியேற்றம் மனிதன் ஒரு நாள் இரு முறை மலம் கழித்தல் சீறுநீர் பகல் 5 தடவை இரவு ஒரு தடவை அல்லாவிட்டால் உடல் நோய் உடையவர்

08) 5 - 7 மணி வரை மூளை நேரம் எதிர்கால நாளைய வேலை விடயம்

09) 7 - 9 மணி இரவு உணவு சாப்பிட்டல் உறக்கம்

10) 9 - 10 மணி உறங்கல் நல்லது

11) 11 -1 மணி வரை பித்தப்பை சுரப்பி நேரம்

12) 1-3 மணி வரை கல்லீரல் நேரம் இந்த நேரம் வரை உறங்குவது உடலுக்கு நன்று

"உள தில தென்றலின் எனதுடல் என்றலில்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலில், கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினுளான்மா"

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கன்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதி வாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசே லோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
நேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தென்ன வெண்ணகையால் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோரின் அன்புடமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நற்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக்கிளி மொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானே நீ நென்னலை நாளைவந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன் னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலில் பரிசேலோ ரெம்பாவாய்

கோழிசிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங் கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆறுமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைப்பங்காளனையே பாடலோ ரெம்பாவாய்

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோன்
உன்னடியார் தான்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எனச் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதையொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மெய்யார் தடம் பொய்கை புக்கு முகே ரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வடியடியோம் வாழ்ந் தோங்காண் ஆரழல்போற்
செய்யா வெண்ணீறாடிச் செல்வா சிறுமருங்கில்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வைகயெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம் பலத்தே தியாடும்
கூத்தன் இவ்வனுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வாண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோ ரென்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம் போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளாமா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ் கொன்றை தாழ்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமாபாடிப்
போதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீ ரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையார் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆறுமாம்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஒருருவப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முனசுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குன் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயம் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிகமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகை வீற்றாற்போல்
கண்ணார் இரவி கதிவந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
கண்ணார் அமுதமுமாய் நின்றார் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக் கொன்றுரைப் போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குள் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக் கெங்கோள் நல்குதியேல்
எங் கெழிலென் ஞாயிறெமக் கேலோ ரெம்பாவாய்

போற்றி அருளுகனின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

# திருமதி. சின்னப்பிள்ளை பாலிப்போடியின் ஆத்மா இறைவனடி சேரப் பிராத்திக்கின்றேன்

குருத்தியானம் :

"குருப்ரஹ்மா குரு விஷ்ணு குருதேவோ மஹேஸ்வர
குரு ஸாஷாத் பரம் பரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம்"

அமரத்துவம் அடைந்த அமரர் பாலிப்போடி சின்னப்பிள்ளை அன்னையார் பண்டாரியாவெளி என்னும் பழமை வாய்ந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்து பாலிப்போடி தன்னை வாழ்க்கை வலக் கையாக கரம் பிடித்து சீர் கொண்ட சிறப்பு பெற்று சிறந்து விழங்கும் திருப்தியாம் களுமுந்தன்வெளிக் கிராமத்தில் மக்கள் செல்வங்களோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தவா. இவரது சிறப்பு இவர் யாரிடமோ யாருக்கோ மனம் நோகும் அளவிற்கு வார்த்தைகள் பேசுவதில்லை அன்பு வார்த்தைகளாகும் இவருடைய ஆதரவு அரவணைப்பு மிகமிக அளவில்லாதது மனிதனுடைய வாழ்வியலில் பரிபூரணமான வாழ்க்கை வாழ்ந்து காட்டிய பெரியவர்களுள் தானும் ஒருவராக விளங்கினார்.

**நரகங்களின் வகைகள் :**

"பறவைகளின் அரசனே பாவிகள் காலதேவனால் தண்டிக்கப்படுகிறார்கள், நரகங்கள் மொத்தம் 84 லட்சம் இருக்கிறது"

நரகங்கள் 28 முக்கியமானது அவைகளில்

| | | |
|---|---|---|
| தாமிரஸ்ரம் | மிருதகம் | மகாபதம் |
| சௌகசம் | காலசூத்திரம் | ஆவித்தியம் |
| திரௌஞ்சம் | சங்காதம் | அந்ததாமிஸ்ரம் |
| மஹாளபரவம் | லோகத்துத்தம் | கும்ப்பாகம் |
| சான்மலி | சம்விஷம் | அசிபத்திரவனம் |
| ரௌரவம் | சம்ரணம் | ஆகியவை மிகிந் |
| குட் மலம் | மகாநரகம் | கொடியவையாகும். |
| பூதி | கோகளம் | |
| | சஞ்ஜீவனம் | |

பிறர் மனைவி, குழந்தை அவர்களுக்குச் சொந்தமான பொருள் இவற்றை கொள்ளையடிப்போர் அடையும் நரகம் தாமிரஸ் நரகம் என்று பெயர்

கணவன் அல்லது மனைவியை வஞ்சித்து வாழ்வோர் கண்கள் இருள்கவிய மூர்ச்சித்து விழும் நரகம் அந்த தாமிஸ்ரம்

பிறருடைய குடும்பங்களை அழைத்து அவர்களுக்குச் சொந்தமான பொருட்களை அபகரிக்கும் சுயநலக்காரர்கள் அடையும் நரகம் ரௌரவமாகும்.

குரு என்ற ஏழு வகை மான்கள் உண்டு இவை அனேகமானவை இவைகள் பாவிகளைத் துன்புறுத்தும் நரகம் மஹாரௌரமாகும்

சுவையை விரும்பி உயிர்களை வதைத்தும் அவற்றை கொடுமைப்படுத்தியும் வாழ்ந்து பின்னர் இறந்தார் அடையும் நரகம் கும்பீபாகம் எனப்படும்.

பெரியோர்களையும் பெற்றோர்களையும் அவமதித்து அவர்களை துன்புறுத்துவதனால் காலசூத்திரம் என்ற நரகத்தை அடைந்து துன்பப்பட வேண்டும்

அதர்ம வழியில் நடந்து தெய்வ நித்தனையும் செய்பவர்கள் அடையும் நரகம் அசிபத்திரம் என்பதாகும்.

நீதிக்குப்புறம்பாக பிறரைத் தண்டித்து, நீதிக்குப் புறம்பாக நடந்து ஆவணத்துடன் நடக்கும்பாதகர்கள் அடையும் நரகம் பன்றி முகம் என்பதாகும்.

பிறருக்குத் துரோகம் செய்தல், சித்திரவதை செய்தல், கொலை புரிதல், போன்ற செயல்களைச் செய்யும் கொடியவர்கள் அடையும் நரகத்திற்கு அந்த கூபம் என்று பெயர்

சுயநலத்துடன் வாழ்ந்து பக்தியின்றி நியமத்துடன் வாழாமல் இருந்து ஒழுக்கமில்லாமல் வாழ்ந்து இறக்கும் பாவிகள் அடையுமிடம் கிருமிபோஜனம் என்பதாகும்.

பிறருக்குச் சொந்தமான பொருட்களையும், உடமைகளையும் தனது பலத்தால் அபகரித்துக் கொள்ளும் பாவிகள் அடையும் நகரம் அக்கி குண்டம் என்பதாகும்.

தகாத உறவுகளை வைத்துக் கொள்ளும் ஆண், பெண் இவர்கள் அடையும் நரகம் வஜ்ர கண்டம் என்பதாகும்.

எந்தவித வித்தியாசமும் இன்றி கண்டவர்களுடன் கூடி மகிழும் காமுகர்கள் அடையும் நரகம் சான்மலி என்பதாகும்.

பணம், பதவி, அதிகாரம். தருமத்திற்குப் புறம்பான செயல் ஆகியவற்றின் மூலம் அதர்ம வழியில் நடப்பவர்கள் அடையும் நரகம் வைதரணி என்பதாகும்.

மனிதத் தன்மையை விட்டு மிருகங்களைப் போல் வாழும் மனிதர்கள் அடையும் நரகம் பூயோதம் உயிர்களை வதைத்து கொடுமைப்படுத்தி அவற்றைக் கொல்லும் கொடுமைக்காரர்கள் அடையும் நரகம் பிராணயோகம் என்பதாகும்.

பசுக்களை வதை செய்து ஆடம்பரமாக யாகம் செய்பவர்கள் அடையும் நரகம் விசஸனம் மனைவியை கொடுமைப்படுத்தி மோக இச்சைக்கு ஆளாக்கிக் கெடுக்கும் கொடியவர்கள் அடையும் நரகத்திற்று லாலாபாஷம் என்று பெயர்

வீடுகளுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் தீ வைத்தல், வீட்டை அல்லது ஊரைச் சூறையாடுதல், உயிர்களைக் கொல்லுதல், விஷம் கொடுத்துக் கொல்லுதல், மக்களைக் கொன்று குவித்தல், இப்படி பலவிதங்களில் தீவினை புரிபவர்கள் அடையும் நரகத்திற்குச் சாரமேயாதானம் என்று பெயர், பொய்சாட்சி சொன்னால் அத்தகையவர்கள் அடையும் நரகம் அவீசி என்பதாகும்.

மதுவில் மயங்கி குடிபோதையில் இருக்கும் குடிகாரர்கள் அடையும் நரகம் பரிபாதனம் என்பதாகும். ஆணவம், அகம்பாவம் கொண்டு பெரியோர்களையும் உத்தமர்களையும் அவமதித்து தீய செயல்களைப் புரிபவர்கள் அடையும் நரகம் ஷாரகாத்தம் என்பதாகும்.

அப்பாவிகளைக் கொல்லுதல், ஏமாற்றிக் கொல்லுதல், நம்பியவரை ஏமாற்றுதல், தற்கொலை போன்ற பாவச் செயல்களைச் செய்பவர்கள் அடையும் நரகம் சூலரோதம்

பிராணிகளை வதைத்தல், நரமாமிசம் உண்ணுதல், போன்ற பாவச் செயல்களைச் செய்பவர்கள் அடையும் நரகம்

தீயவழியில் பொருள் ஈட்டுதல், ஈயாமல் இருத்தல், செல்வச் செருக்கால் பிறரை அவமதித்தல், துன்புறுத்துதல், ஆகிய செயல்களைச் செய்பவர்கள் அடையும் நரகம் சூசிமுகம் என்றழைக்கப்படுகிறது இது போன்று கொடிய நரகங்கள் பல உள்ளன என்றார். பகவான் கருட புராணத்தில் கூறப்பட்ட கருத்துக்களாகும்

"குடை தானம் - மமபுரி செல்லும் வழியில் நிழலைத் தரும்"
"மாரடி தானம் செய்தால் குதிரை மீது செல்லலாம்"
"அன்னம். அரிசி இவற்றைத் தானம் செய்தால் ஜீவனுக்கு பசி உண்டாகாது"
"தானங்கள் செய்தால் இறந்த பிறகு போகும் வழியில் யமசிங்கரர்கள் சிரமமின்றி அழைத்துச் செல்வார்கள்"

இவற்றை வாழ்க்கையில் கைக்கொண்டால் இன்றைய வாழ்க்கைய நன்றாகக் கொண்டு செல்லலாம். தாயாரின் ஆத்துமாவானது இறைவனடி சேர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சிவஸ்ரீ. த. திருச்செல்வம்*
*ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு*
*களுமுந்தன்வெளி, அம்பிளாந்துறை.*

# பழந்தமிழ் போற்றும் அன்பு தாய்க்கு இதய காணிக்கை

பழகு தமிழ் தென்றல் பாடும் அழகு மிகு
களுமுந்தன்வெளி இன்று உன் பிரிவால்
வெண்மேகம் கறுத்து சோக இருளால் மூடியது பாட்டி
பிறப்போர்க்கு எல்லாம் இறப்பியல் பென்று தெரிந்தும்
இப்புவியில் வாழ்ந்த உனை இன்னும் சில காலம்
வாழவிட பொறுக்கவில்லையே அந்த கடவுள் கூட
பாசமுடன் பல கதைகள் பகலிரவாய் சொல்லுவீரே
பண்பான நற்சிந்தனையை நாவினிக்க பேசுவீரே
அறிவிற்கும் அறத்திற்கும் வழிகாட்டிய எங்கள் பாட்டியே
எப்பிறப்பில் இனியும் யாம் உமைப் பெறுவோம்

நிழலாக நீங்கள் இருக்க உம்
நினைவுகள் எம்மை விம்மியழ வைக்கிறது
நிஜங்களாகிப் போன நினைவுகளைத் தான்
நிம்மதியிழந்து தவிக்கின்றோம் பாட்டி
எம்மோடு நீ இருந்த காலமெல்லாம்
எமக்கு இனிய கோலங்கள் நீங்கள்
விண்ணோடு சென்ற செய்தி கேட்டு
வெடித்ததம்மா எம் குருதி நாங்கள்
உம் நினைவுகளை மனதில் சுமந்து
ஆண்டவனை இறைஞ்சி துதிக்கின்றோம்
உம் ஆத்மா சாந்தி வேண்டி

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன்பிரிவால் துயருறும்
*கண்ணகி ஆட்டோ சங்கம்*
*தும்பங்கேணி.*

## ஸ்ரீ கருட புராணம் வாயிலாக அறிந்த விடையங்கள்

குளித்துவிட்டு சூரிய நமஸ்காரம் மற்றும் பூஜைகளைச் செய்யாமல் உண்பவன் காக்கையாகப் பிறப்பான்.

வெட்ட வெளியில் வைத்து உணவை புசித்தவன் காட்டில் குரங்காகப் பிறப்பான்.

பிறரை மிரட்டிக் கொண்டு வாழ்ந்தவன் பூனையாகப் பிறப்பான்.

பச்சைச் செடிகளைக் கொளுத்தியவன் மின்மினிப் பூச்சியாகப் பிறப்பான்.

பிராமணரை ஏமாற்றி தீய பதார்த்தங்கைக் கொடுத்தவனும், கூடக்கூடாத பிற ஜாதிப் பெண்ணைப் புணர்ந்த பிராமணனும் வண்டியை இழுத்துச் செல்லும் மாடாகப் பிறப்பான்.

எந்தத் தவறும் செய்யாதவரை விரோதித்தவன் கருடனாகப் பிறப்பான்.

புத்தகத்தைத் திருடியவன் பிறந்த காலத்தில் குருடனாவான்.

பிராமண குடும்பத்தை அழித்தவனுக்கு பிள்ளைகள் நிலைக்கமாட்டார்கள்

பசித்தவனுக்கு சோறு போடாதவனுக்குப் புத்திரப் பாக்கியம் கிடையாது.

பிறருக்குச் சொந்தமான ஆடைகளைத் திருடியவன் உடும்பாகப் பிறப்பான்.

பிறருக்கு விஷம் கொடுத்துக் கொன்றவன் பாம்பாகப் பிறப்பான்

குருவின் மனைவி மீது ஆசை வைத்தல் ஓணானாக் பிறப்பான்

வாசனைப் பொருட்களைத் திருடியவன் உடம்பில் துர்நாற்றம் வீசும்

ஒருவன் செய்யும் தொழிலைக் கெடுத்தவன் 1000 பசுக்களைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவான்.

12 வயது வரை உள்ள குழந்தைகள் செய்யும் பாவம் பெற்றோரைச் சாரும் பெற்றோர் இல்லாவிட்டால் வளர்ப்பவரைச் சாரும்

# நெஞ்சத்தில் என்றும் வாழ்வாய்

தோன்றில் புகழுடன் தோன்றிய பண்டாரியாவெளி பெற்றெடுத்த களுமுந்தன்வெளி வாழவைத்த அன்னை அமரர். பாலிப்போடி சின்னப்பிள்ளை அவர்களின் பிரிவுச் செய்தி அதிர்ச்சியையும், இழப்பையும் ஏற்படுத்தியது. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் வஞ்சனை செய்யா வாக்கும் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்த ஜீவன் மௌனித்து விட்டது. காலத்தின் வேதனையறிந்து சேவை செய்த மாதாவின் மூச்சு ஓய்ந்து விட்டது.

"பெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

என்றவாறு நேற்று இருந்தார் இன்றில்லை என்ற பெருமையைக் கொண்ட இவ்வுலகில் நிறைவான பணி செய்து மக்கள் மனங்களில் மாறாது இடம்பிடித்து விட்டாய்.

தன் இளமைக் காலத்தில் தன் பதியை இழந்த போதும் தனக்கென வாழாது மக்களுக்கென வாழ்ந்து குடும்ப உறவுகளை சேர்த்தணைத்து அயலவருக்கும் உறவினர்களுக்கும் கைம்மாறு கருதாது கடுமையாய் உழைத்தாய் துயருற்ற உன் மக்களின் துயர் துடைக்க நீ காத்திரமான பங்களிப்பும் செய்து அவர்களின் உயர்ச்சிக்கு பாத்திரமானாய் என்றால் அது மிகையல்ல.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பரிதவித்த பிள்ளைகளின் வாழ்க்கை தடம்புரளாமல் சீரான முறையில் சிறப்பான வகையில் வழி நடத்தினாய் செய்தது போதும் என்று எண்ணி காலன் வரவழைத்து விட்டான். போலும் விண்ணுலகம் எய்தினும் வேற்றுருவில் மண்ணுலகம் வந்து பரிதவிக்கும் மக்களுக்கு ஆறுதல் தருவாயென ஏங்குகின்றனர். உன் பிரிவுத்துயர் தாங்காது விம்மிப் பொருமி விழிநீர் சிந்தி வேதனையால் துடிக்கும் பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் ஆறுதல் உரைக்க யாருளரோ?

"கருவறைக்குள் வரும்போதே கல்லறைக்குள் அழைக்கின்ற
கடவுளை நான் காண்பதொரு நாள்"
கண்டபடி விளையாடிக் காய்ந்ததொரு திருமேனி
கனல் வாயில் வீழுமொரு நாள்
அருளுடைய பெரியோர்கள் உலகறியச் சொல்லுகின்ற
அனுதாபச் செய்தி வருநாள்
அத்தனையும் தெரிந்தாலும் பித்தர்களை போல் இங்கு
ஆடுவது என்ன திருநாள்
கருமமது செய் பலனை எதிர்பாராமல்
கண்ணனவன் சொல் போலவே
கடமைதனைச் செய்கின்ற மனிதர்கள் யாவர்க்கும்
புகளுண்டு கல் போலவே"

மரணத்தின் பயணம் முடிவல்ல அது தோற்றத்தின் துவக்கமே இது மனித வாழ்வின் நிலையாமை உவப்பத்தலைக் கூடி உள்ளம் பிரிந்துவிட்ட உன் இறுதிப் பயணம் ஆறாத் துயரையும் அளவிடா இழப்பையும் ஏற்படுத்திவிட்டது அன்னியமாகிவிட்ட உன் ஆன்மா ஐக்கியமாகிவிட்ட மக்களின் மனங்களில் என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கும் உன் வழிகாட்டல்கள் பெருமைசேர்க்கும் என்பது திண்ணம்.

நினது இழப்பினால் துடித்துத் துயருறும் உறவுகளுக்கும் சொந்தங்களுக்கும் இறையருள் சேர்த்து சாந்தி சமாதானமடையப்பெற ஆராதிப்பதோடு உன் ஆன்ம ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல ஸ்ரீ மாணிக்க விக்கினேஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

*திரு. பொன். நாகலிங்கம்*
*(உதவி முகாமையாளர், சமுர்த்தி மகா சங்கம், வெல்லாவெளி,*
*தலைவர், களுமுந்தன்வெளி, ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார், முத்துமாரியம்மன்*
*ஆலயங்களின் பரிபாலன சபை)*

# விழிநீர் சமர்ப்பணம்!



மலர்வு 1927 03 21

உதிர்வு 2016 01 10

## அமரர்- பாலிப்போடி - சின்னப்பிள்ளை

சுளுமுந்தன்வெளி

பச்சிளம் பொழுதின் பைங்கூழ் நீராய்
தெளிந்தே தெரிந்தொளிர் மனம் கொண்டு
சுடுங்கனல் தாங்கும் கனியமுதொன்று
கனையனல் கண்டு கலங்குவதேனோ?

உளியால் ஓங்கி உடைகின்ற போதும்
உயிர்வலி தாங்கும் கருங்கற் பாறை
உயிர்பெருஞ்சிற்பம் உதிர்ப்பதற்குள்ளே
உரசலில் நாணி உதிர்வது ஏனோ?

கரும்பெனின் வாழ்க்கை இனிப்பதுமில்லை
கழுவெனின் வாழ்க்கை இடிவதுமில்லை!
கனிவுடன் கசப்பு கலந்திட்ட போதும்
கடிமனம் என்றும் கலங்குவதில்லை!

**உங்கள் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்**

# மரண அறிவித்தல்

பிறப்பு
1927
03
21



இறப்பு
2016
01
10

பண்டாரியாவெளியைப் பிறப்பிடமாகவும் கருமுத்தன்வெளியைப் வசிப்பிடமாகவும் கொண்ட...

## அமரர். திருமதி. பாலிப்போடி–சின்னப்பிள்ளை அவர்கள்

**10-01-2016 திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்**

அன்னார் காலம்சென்ற மாணிக்கப்போடி- மூர்த்திப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலம்சென்ற பாலிப்போடியின் அன்பு மனைவியும், காலம்சென்ற திரு.திருமதி.செம்பப்போடி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், கண்மணி, பூரணம்மா, பஞ்சவர்ணம், அபிராமி (ஆதார வைத்தியசாலை களுவாஞ்சிக்குடி), காலம்சென்றவர்களான நடராஜா, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கலெட்சுமி, சிவலிங்கம், நடராஜா, சத்தியசிங்கம், தனகோபாலசிங்கம், வேதநாயகம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை ஜெயிலர்), புவனேந்திரன், இராஜேஸ்வரி, சந்திரசேகரம் (மொனராகல வங்கி மட்டக்களப்பு), மகேஸ்வரி (ஆசிரியை மட்/மாவடிமுன்மாரி அ.த.க. பாடசாலை), கோமளேஸ்வரி (பிரான்ஸ்), நவரெத்தினம் (சமுர்த்தி ஊக்குவிப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியும், பார்வதி, லெட்சுமி, காலம்சென்றவர்களான இளையதம்பி, கனகம்மா, பாக்கியம், தம்பிப்பிள்ளை, திருமேனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கப்பிள்ளை, மாணிக்கப்போடி, திருமாதேவி, திருமஞ்சனம், காலம்சென்றவர்களான, வல்லிபுரம், நாகமணி, சகாதேவன், வீரப்பிள்ளை, மாரிமுத்து, பாக்கியம், செல்லத்தங்கம் ஆகியோரின் மைத்துனியும், தங்கனாச்சிப்பிள்ளை, கணேசமூர்த்தி, சிவஞானம், சுந்தரலிங்கம், பரிமளம், ரோகினி (ஆசிரியை பாலர் பாடசாலை), காளியம்மை, சந்தனப்பிள்ளை ஆகியோரின் ஒன்றுவிட்ட தாயாரும், நாகேஸ்வரி (ஆசிரியை பாலர் பாடசாலை), சந்திரசேகரம் (கட்டார்), சரஸ்வதி, ரோதிமலர், சந்திரபோஸ், திருஞானமூர்த்தி (கட்டார்), தேவிகா, மதர்சியா, விதுர்சன், விந்திகா, சாந்தினி, தில்லைநாதன் (டுபாய்), இந்திரகுமார், காலம்சென்றவர்களான, ராஜேந்திரன், மனோகரன், குணசீலன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், சிதுர்சன், விதுர்சனா, வேதியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 10-01-2016 ம் திகதி பிப 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கருமுத்தன்வெளி பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆழ்ந்த அனுதாபத்துடன் அறியத்தருகின்றனர்.

**தகவல்–குடும்பத்தினர்**

# விழிநீர் சமர்ப்பணம்!

மலர்வு
1927
03
21



உதிர்வு
2016
01
10

## அமரர்~ பாலிப்போடி ~ சின்னப்பிள்ளை

கருமுந்தன்வெளி


பச்சிளம் பொழுதின் பைங்கூழ் நீராய்
தெளிந்தே தெறந்ததொளிர் மனம் கொண்டு
கடுங்கனல் தாங்கும் கனியமுதொன்று
கனமனல் கண்டு கலங்குவதேனோ?

உளியால் ஓங்கி உடைகின்ற போதும்
உயிர்வலி தாங்கும் கடுங்கற் பாறை
உயிர்பெருஞ்சிற்பம் உதிர்ப்பதற்குள்ளே
உரசலில் நானி உதிர்வது ஏனோ?

கரும்பெனின் வாழ்க்கை இனிப்பதுமில்லை
கழுவெனின் வாழ்க்கை இழிவதுமில்லை!
கனிவுடன் கசப்பு கலந்திட்ட போதும்
கடிமனம் என்றும் கலங்குவதில்லை!

**உங்கள் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்**

# வம்ச விருட்சம்


மாணிக்கப்போடி - மூத்திப்பிள்ளை
செம்பாப்போடி
கனகம்மா
சின்னப்பிள்ளை
இளையதம்பி
தம்பிப்பிள்ளை
பாக்கியம்
திருமேனி
பார்வதி
லெட்சுமி
பாலிபோடி
வீரிப்பிள்ளை
நடராஜா
+
தங்கலெட்சுமி
இராஜேந்திரன்
மனோகரன்
சாந்தினி
குணசீலன்
கண்மணி
+
சிவலிங்கம்
நாகேஸ்வரி
சந்திரசேகரம்
சரஸ்வதி
சோதிமலர்
+
தில்லைநாதன்
வேதிஜன்
சந்திரபோஸ்
பூரணம்மா
+
நடராஜா
பஞ்சவர்ணம்
+
சத்தியசிங்கம்
திருஞானமூர்த்தி
தேவிகா
அன்னலெட்சுமி
(செல்வி)
டிதர்சிகா
லிதுர்சன்
அபிராமி
+
தனகோபாலசிங்கம்
லிர்திகா



அக்ஷயன் அச்சகம், பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை. 065 2056994